Cambridge International AS Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Subsidiary Level

**TAMIL LANGUAGE** **8689/02**

Paper 2 Reading and Writing **October/November 2015**

**1 hour 45 minutes**

INSERT

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய பத்தி இங்கே எழுதப்பட்டு இருக்கும்.

நீ இந்த இடத்தில் எப்படி எழுதவேண்டும் என்று உன் எண்ணங்களை இங்கே எழுதலாம்.
இதைத் தேர்வு அதிகாரி பார்க்க மாட்டார்.



DC (NF) 119282
© UCLES 2015
CAMBRIDGE International Examinations

## பகுதி 1

முதல் கட்டுரையைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

வெற்றிபெற நிச்சயமான வழி வாழ்வில் ஏற்படும் ஆரம்பத் தோல்விகள்தான். தோல்விகளை ஏற்றுக் கொள்வது நமக்குப் பழகிப் போன ஒன்று. மோட்டார் மெக்கானிஸத் துறையில் மேதையான சார்லஸ் கெட்டரிங் ‘ஒவ்வொரு கண்டுபிடிப்பாளனும் எப்பொழுதும் தோற்ற வண்ணமிருக்கிறான்’ என்று சொன்னார். ‘தோல்விகளைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை தவிர்க்கத் தேவையில்லை. கண்டுபிடிப்பில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் எப்பொழுதும் தோற்ற வண்ணமிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆயிரம் தடவைகள் அவனது முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. முயற்சி செய்து தோற்பதற்கும், தோற்றபின் முயல்வதற்கும் நாம் சலிப்புக் காட்டக் கூடாது. முயற்சி செய், தோல்வி அடை, தோல்விக்குப் பின் முயற்சி செய்’ என்று அவர் கூறினார்.

தொடர்ந்து தோல்வியுறுவதால் தன்னால் முடியாது என்று மனம் தளர்ந்து போதல் கூடாது. தோல்வி உங்கள் பெருமையைக் குலைத்துவிடக் கூடாது. சில தோல்விகளால் தன்னம்பிக்கை அழிவுற்று, திடீர் தோல்வியாளர்கள் நிரந்தரத் தோல்வியாளர்களாக மாறி விடுகின்றார்கள். அவர்கள் தன்னம்பிக்கை சின்னாபின்னமாகின்றது. அவர்கள் ஆர்வம் இழந்து முயற்சியைக் கைவிடுகின்றார்கள். சில நேரத் தோல்விகளால் மனம் பதறிவிடுகின்றவர்கள் சீக்கிரம் முயற்சிகளிலிருந்து விலகிவிடுகின்றார்கள். அத்துடன் தங்களுக்குள் சுருண்டு விடுகின்றார்கள். தங்களால் வெற்றிபெற இயலாது என்று அஞ்சுகின்றார்கள்.

பழைய வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து நாம் உண்மைகளை உணர்வது போலவே கடந்த காலத் தவறுகளிலிருந்து உண்மைகளை உணரலாம். தெரிந்து செய்யும் தவறுகள் எம் மனதில் குற்ற உணர்ச்சியை உருவாக்கிவிடும் என்பதை மறத்தல் கூடாது. அறிந்து செய்யப்படுபவை கெட்ட செயல்களாகும். உங்களுக்கு நன்றாகத் தெரிந்து கெட்ட செயல் செய்யக் கூடாது. அது புத்திசாலித்தனமுமில்லை, பாராட்டுக்குரிய செயலுமில்லை, தர்மமுமில்லை. தெரிந்து செய்யும் கெட்ட செயல் பின் விளைவுகளை ஏற்படுத்தும். குடும்பத்திற்கு நீங்காத அவமரியாதையை உண்டுபண்ணும். ஒருவரது முன்னேற்றத்திற்குப் பிரதான தடைக்கல்லாகவும் இது அமையும். மனோதத்துவ மருத்துவரான டாக்டர் குணசேகரன் அவர்கள், ‘தெரிந்து செய்யும் கெட்ட செயல்களால் ஏற்படும் திருப்தியிலும் பார்க்க குற்ற உணர்வே அவர்களுக்கு மேலோங்கி இருக்கும்’ என்று கூறியுள்ளார்.

எது பலன் தராது என்பதைக் கண்டறிவதற்கும் எது பலனைத் தரும் என்பதைச் சோதித்து அறிவதற்குமான முயற்சிகளில் நேர்மையான பல தவறுகளை ஒருவர் செய்யக்கூடும். தாமஸ் எடிசன் பத்தாண்டுகள் தவறுகளாகவே சோதனை புரிந்து வந்தார். இறுதியில், கார்பன் தொலைபேசி ஊடுகடத்தியைக் கண்டுபிடித்தார். எடிசனும் அவரது விஞ்ஞான நண்பர்களும் பல தாவரங்களைப் பரிசோதித்து வகைப்படுத்திய பிறகே லேடக்ஸ் என்ற ரப்பர் போன்ற பொருளை ஒரு தாவரத்திலிருந்து உற்பத்தி செய்யலாம் என்பதைக் கண்டறிந்தனர்.

ஒருமுறை வெற்றிபெற பல தவறுகள் அல்லது தோல்விகள் ஏற்படலாம். எடிசன் வேறு எவரையும்விட அதிகம் தோல்விகள் கண்டவர். எது பலன் தராது என்பதை அவர் தனது ஆய்வுகளின் மூலமாகக் கற்று உணர்ந்தார். இந்தக் கல்விக்குப் பின் வெற்றி அவருக்குச் சுலபமானதாக இருந்தது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள கண்டுபிடிப்புகளை அவர் பதிவு செய்தார். எனவே, தவறு செய்துவிடுவோம் என்று அஞ்சினால் நாம் பெரிய வெற்றியை அடைய முடியாது.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

கோபப்படுவதும் விரோதம் கொள்வதும் நல்லதன்று. இதனால் தீமையே அதிகம். விரோதத்தையும் கோபத்தையும் அடக்கி வைத்திருந்தாலும் ஆபத்து. வெளியே ஆத்திரம் தீரக் கத்தினாலும் ஆபத்தே. அது உங்களை உணர்ச்சி பூர்வமாய், உடல், மன, ஆத்மார்த்தமாய் அழித்து விடுகிறது. இதனால் நஷ்டம் அதிகம். உங்களுக்கு மரியாதை குறைகிறது. உங்களை யாரும் மதிப்பதில்லை. விரோதத்தாலும் ஆத்திரத்தாலும் இரைச்சல் போடுகிறவர்களை நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் என்று ஒதுக்கி விடுகிறார்கள். உடல் ரீதியாக மனம் சோர்ந்து, மூளை தற்காலிகமாகச் செயலற்று, கை நடுக்கம் போன்றவை ஏற்படும்.

'கோபம் கோழைத்தனம். அது மனப் பாதிப்பையும் பதைபதைப்பையும் காட்டும்' என்கிறார் புகழ்பூத்த தத்துவஞானி மார்க்கஸ் அரேலியஸ். அமைதியாக மனம் இருந்தால் உங்களுக்கு யாரும் எந்தவிதத் தொல்லையும் தர முடியாது. அமைதியான மனதைக் கெடுக்கும் குணம் கோபத்திற்கு உண்டு. பழைய நிகழ்ச்சிகளைக் கிளறிக் கோபப்பட வேண்டாம். கடந்த கால நிகழ்ச்சிகள் நடந்து முடிந்து விட்டன. அவற்றை மாற்ற முடியாது. நடந்து முடிந்த நிகழ்ச்சிகளைத் திரும்பவும் வேறு விதமாக அமைத்து விட முடியாது. சென்றவற்றை நினைத்துக் கோபப்பட்டுப் பிரயோசனம் இல்லை. மாற்ற முடியாத பழைய நிகழ்ச்சிகளைக் கண்டு வெகுண்டு எழுந்து என்ன பயன்? ஆகவே, கோபத்தின் காரணத்திற்கான உங்கள் நிலையை மாற்றிக் கொள்ளுங்கள். என்ன நடந்து விட்டது என்பதை விட அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்பதே முக்கியமாகும். 'உங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளைத் தொடர்ந்தும் நினைத்துக் கொண்டிருக்காவிட்டால் தவறு என்பதே கிடையாது' என்று சொன்னார் சீன தத்துவஞானி கான்பூஷியஸ். கோபப்பட்டுக்கொண்டிருந்தால் நிலைமை மாறாது. மாறாக மோசமாகி விடும்.

தொடர்ந்து ஏற்படும் ஆவேசத்திற்கு முதற்படி கோபமாகும். வருத்தம் கோபத்தை உண்டாக்குகின்றது. கோபம் வெறுப்பைக் கிளறுகின்றது. வெறுப்பு விரோதமாக மாறுகின்றது. விரோதம் பகையாகி விடுகின்றது. ஆகவே, வருத்தம் வந்தவுடன் அதனை அலட்சியம் செய்யாது உஷாராகிவிடவேண்டும். உங்களுக்கு ஏற்பட்டதாக நீங்கள் கருதும் மற்றவர்களின் அலட்சியம், கோபம், தொல்லை போன்றவை அவர்களால் எப்போதும் வேண்டுமென்றே உண்டாக்கப்படுவதில்லை. இந்த அவசர உலகில் அவரவர்கள் தங்கள் வேலைகளையே முக்கியமாகக் கருதுவதால் சில சமயங்களில் எதிர்பாராத மோதல் ஏற்படுவது கண்கூடு. உதாரணமாக நெரிசல் மிகுந்த தெருக்களில் உங்கள் காலை மற்றவர்கள் மிதிக்கக்கூடும். இது வேண்டுமென்றே செய்த தவறன்று. கோபம் மற்றவர்களைவிட உங்களைத்தான் அதிகம் பாதிக்கின்றது. ஆகவே மற்றவர்கள் தெரியாமல் செய்யும் தவறுகளை மறந்து விடுங்கள். அல்லது அது அற்பமான விடயம் என்று தள்ளி விடுங்கள். அல்லது தங்களைக் கோபப்படுத்திய விடயத்தைப் பார்த்துச் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு ஏற்பட்ட அலட்சியங்களையும் அவதூறுகளையும் நினைத்து நினைத்து ஆண்டுக் கணக்கில் குமுறி என்ன பயன். அது உங்களுடைய இப்போதைய இன்பத்தைக் கெடுத்து விடும். கோபம் விஷம் குடிப்பது போன்றது. தென் அமெரிக்காவில் ஒருவகைத் தேள் உண்டு. கோபம் வந்தால் தன்னைத் தானே கொட்டிக் கொண்டு இறந்துவிடும். இது கோபத்தின் உச்ச நிலை. தன்னைத்தானே விஷமாக்குவது பற்றி மனோதத்துவ ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. 'அறியாமையில் தொடங்கும் சினம் வருத்தத்தில் முடிகின்றது' என்பார் கிரேக்க ஞானி பிதாகரஸ். கோபத்தை வெளிப்படுத்தி விடுகின்றோம். ஆனால் வருத்தம் உள் மனத்தைக் குடைந்து கொண்டு குற்ற உணர்ச்சியை வளர்த்துக் கொண்டிருக்கும்.

நாம் அடிக்கும் கோபச் சாட்டைஅடிகள் நம் மீதே தாக்கி நமது உடலிலும் உள்ளத்திலும் மறைக்க முடியாத வடுக்களைத் தோற்றுவிக்கும். கோபத்தினால் மற்றவர்களைக் கேலி செய்வது மிகவும் கொடூரமானது. கோபம் ஏற்படும் வேளைகளில் அச் சூழலிலிருந்து விலகிச் செல்லுதல் நன்மை பயக்கும். அல்லது தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களிடம் அறிவுரை கோரவும். முன்னர் நடந்த மிகவும் மகிழ்ச்சியான சம்பவமொன்றை நினைத்துப் பார்ப்பதும் கோபத்தைத் தணிப்பதாக அமையும். அமைதியாக இருப்பதனால் அதிக நன்மை உண்டு. நம்மை கோபம் உலுக்குகிற நேரத்தில் மனத்தை அடக்குவது மிகவும் நல்லது. 'ஒரு நிமிஷ நேரம் கோபத்தை அடக்குபவன் ஒரு நாள் முழுவதும் வரும் துன்பத்தைத் தடுக்கலாம்' என்று ஒரு பழமொழி உண்டு. ஆகவே, கோபத்தை நிறுத்த வேண்டும்.

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.